## FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.வி.மு.வி. பிரிவு 154 இன் கீழ்)~~

**Under Section 173 BNSS**

TAMIL NADU
INTEGRATED INVESTIGATION

C 8081689

1. District : Dharmapuri
   மாவட்டம்
   PS: V & AC
   காவல்நிலையம்
   Year: 2025
   ஆண்டு
   FIR No.: 01/AC/2025
   மு.த.அ. எண்
   Date:
   நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended No 2018 — Sections பிரிவுகள்: 7(b)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
   குற்ற நிகழ்வு நாள்
   Date from :
   நாள் முதல்
   Date to : 22.04.2025 at about &
   நாள் வரை
   Time Period :
   நேர அளவு
   Time from :
   நேரம் முதல்
   Time to : 25.04.2025 at about
   நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 29.04.2025
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
   Time : 10.00 hrs
   நேரம்

   (c) General Diary Reference : Entry No(s)
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time :
   நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer typed (Written)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Sub-Treasury Palacode, about North-west.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number :
   முறைக் காவல் எண்
   (b) Address :
   முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Avinash
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : Tr. Su
   தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 26/2025
   நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : Indian
   நாட்டினம்
   (e) Passport No. : —
   வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : —
   வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : —
   வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Sales Manager, Private Company
   தொழில்
   (g) Address : s/o Subramani, No. 6/58-1, Alraj Gounder c Palacode Town & Tk, Dharmapuri
   முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Ramachandran, Additional Sub-Treasury Office Palacode, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Aravarh d 29/04/2025 | [signature] 29/04/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.04.2025 at 12.50hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ..........
VAC, DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/AC/2025, u/s 7 (b) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி .

******

இன்று 29.04.2025-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, அல்ராஜ்கவுண்டர் தெரு, க.எண்.6/58–1 என்ற முகவரியைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் திரு.S.அவினாஸ், என்பவர் நிலையம் வந்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர், S.அவினாஸ், வயது–26, த/பெ.சுப்பிரமணி, க.எண்.6/58–1, அல்ராஜ்கவுண்டர் தெரு, பாலக்கோடு, தருமபுரி. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புரி பிரிவு, தருமபுரி. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் MSW படித்துள்ளேன். தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். எனது அம்மா R.கவிதா அவர்கள் பாலக்கோடு ஒன்றியம், சிக்கார்தனஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அறிவியல் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். எனது அம்மாவிற்கு 2023 ஆம் ஆண்டு கர்ப்பபை புற்றுநோய் ஏற்பட்டு பெங்களூரில் உள்ள நாராயண இருதால யா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவருக்கு திடீரென்று இடது கை மற்றும் கால் முடக்கம் ஏற்பட்டு தொடர்ந்து மருத்துவ விடுப்பில் இருந்ததாலும், அவரால் பள்ளியில் மாணவர்களுக்கு பாடம் எடுக்கும் அளவிற்கு உடல்நிலையில்லாத காரணத்தாலும், வட்டார கல்வி அலுவலர் அவர்கள் தருமபுரி அரசுக்கல்லூரி மருத்துவக்குழுவினருக்கு பரிந்துரை செய்தார். அதன் அடிப்படையில், எனது அம்மா அவர்கள் அரசு மருத்துவக்குழுவில் ஆஜரானார். பின்னர், எனது அம்மா அவர்கள் தொடர்ந்து பள்ளியில் பணி செய்ய முடியாதென்று அரசு மருத்துவக்குழுவினர் பள்ளி கல்வி துறைக்கு பரிந்துரை செய்ததின்பேரில் கடந்த 27.02.2025ந்தேதி வட்டார கல்வி அலுவலகம் மூலம் எனது அம்மாவிற்கு விருப்ப இயலாமை ஓய்வு வழங்கப்பட்டு, கடந்த 27.02.2025ந்தேதி பணி விருப்ப இயலாமை ஓய்வு பெற்றார். பின்னர், வட்டார கல்வி அலுவலகம் மூலம் எனது அம்மாவிற்கு வழங்கவேண்டிய பணிஓய்வு பலன் குறித்த கோப்பை Principal Accountant General (A&E), TamilNadu, Chennai அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கு எனது அம்மாவிற்கு 09.04.2025–ந் தேதியிட்ட Final Payment of Provident Fund Rs.1293507/- மற்றும் Retirement Gratuity Rs.16,28,878/– ஆக மொத்தம் ரூ.29,22,384/– வழங்க ஆவனம் செய்து அதற்கான கடிதம் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தது. அந்த கடிதத்தை நான் எடுத்து கொண்டு கடந்த 21.04.2025ந்தேதி காலை 11.30 மணிக்கு பாலக்கோடு சார் கருவூலத்திற்கு

சென்றேன். அங்கிருந்த அலுவலரிடம் எனது அம்மாவிற்கு வந்திருந்த AG ஆபிஸ் கடிதத்தை காட்டி விசாரித்தேன். அவர், அந்த அலுவலகத்திலிருந்த கூடுதல் சார் கருவூல அலுவலர் திரு.இராமசந்திரன் என்ற அலுவலரை காட்டி அவரை பார்க்குமாறு கூறினார். நான் அவரிடம் சென்று எனது அம்மாவிற்கு AG ஆபிசிலிருந்து வந்திருந்த கடிதத்தை காட்டினேன். அதற்கு, அவர் AG ஆபிஸ் கடிதம் தருமபுரி தலைமை கருவூல அலுவலகத்திலிருக்கும் இன்னும் இங்கு வரவில்லை, அதற்கு கொஞ்சம் செலவாகும் என்று கூறினார். நான் எவ்வளவு சாரென்று கேட்டேன். இப்போதைக்கு ரூ.4,000/–த்தை மட்டும் கொடு, நான் தருமபுரி ஆபிசிலிருந்து பைலை வாங்கிவர ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். என்னிடம் அப்போது பணம் இல்லாத காரணத்தால் நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், 22.04.2025–ந்தேதி காலை சுமார் 10.45 மணிக்கு நேரில் சென்று அவர் கேட்ட ரூ.4,000/– த்தை கொடுத்தேன். அப்போது, கூடுதல் சார் கருவூல அலுவலர் திரு.இராமசந்திரன் அவர்கள் எனது அம்மாவிற்கு அரசு மூலம் வந்துள்ள பணத்தில் ஒரு சதவீதம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். நான் எவ்வளவு சாரென்று கேட்டேன். ரூ.30,000/– கொடுக்குமாறு கேட்டார். நான் எனது அம்மாவிடம் கேட்கவேண்டுமென்று சொன்னேன். அதற்கு அவர், தான் பைலை ரெடி செய்துவிடுவேன். என்னை வெள்ளிக்கிழமை 25.04.2025ந்தேதி காலை தான் கேட்ட ரூ.30,000/–த்தை எடுத்து கொண்டு வருமாறு சொன்னார். நான் 25.04.2025–ந்தேதி காலை சுமார் 10.00 மணிக்கு திரு.ராமசந்திரன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, எனது அம்மாவிற்கு மருத்துவ செலவு அதிகமாக ஆகிறது. அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியாதென்று சொன்னேன். அதற்கு திரு.ராமசந்திரன் அவர்கள் இன்று உனது அம்மா பேங்கிற்கு பணம் வந்துவிடும், ரூ.10,000/–த்தை மட்டும் தனக்கு கொடுக்குமாறு கேட்டார். நான் எனது அம்மா அக்கவுண்டிற்கு பணம் வந்தவுடன் ரூ.10,000/–த்தை எடுத்து கொண்டு திங்கள் கிழமை 28.04.2025–ந்தேதி கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு திரு.ராமசந்திரன் அவர்கள் தான் 28.04.2025–ந்தேதி தனது அலுவல் பணியாக திருவண்ணாமலைக்கு செல்வதாக சொன்னார். அதனால் 29.04.2024–ந்தேதி ரூ.10,000/–த்துடன், பாலக்கோடு அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். மேலும், பாலக்கோடு சார் கருவூல அலுவலகம் மூலம் எனது அம்மாவின் பேங்க் அக்கவுண்டிற்கு பணம் ரூ. 29,22,384/– வந்திருந்தது. மேலும், கூடுதல் சார் கருவூல அலுவலர் திரு.ராமசந்திரன் அவர்கள் கேட்ட ரூ.10,000/–த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, பாலக்கோடு கூடுதல் சார் கருவூல அலுவலர் திரு.ராமசந்திரன் அவர்கள் என்னிடம் கேட்ட ரூ.10,000/– லஞ்சப்பணத்துடன் அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.10,000/–த்தை கேட்ட

பாலக்கோடு கூடுதல் சார் கருவூலக அலுவலர் திரு.ராமசந்திரன் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் Avinash.S. 29.04.2025. Sir, Received a computer typed written report on 29.04.2025 at 10.00 hrs and further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally, was verified and found that the reputation of the accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.01/AC/2025, u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 29.04.2025 at 10.30 hrs against the accused Tr.Ramachandran. The original FIR and the complaint of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

29/04/2025

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.